## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண். 313/2006

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | 06.03.2026 |
| **பெயர்** | **சின்னப்பா** |
| **த/பெ** | **முனுசாமி** |
| **சாட்சி** | **DW6** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.33.p.m**

**குறுக்கு விசாரணை–**

1. நான் இராதாகிருஷ்ணநாயுடுவின் நிலத்தை பார்த்துக்கொள்கிறேனா என்றால் ஆம். நான் தினக்கூலியா என்றால் ஆம். இந்த வழக்கை பொருத்து என்ன சங்கதிகள் தெரியும் என்றால் நிலத்திற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு. வழக்கு சொத்தின் சர்வே எண், விஸ்தீர்ணம் தெரியுமா என்றால் தெரியாது. எனது பிரமாணவாக்குமூலத்தில் 4 ம் பத்தியில் இராதாகிருஷ்ணநாடுவிற்கும், ரத்தினவள்ளியம்மாளுக்கும் விற்பனை செய்ததாக கூறுவது எந்த வருடம் என்றால் தெரியாது. தோராயமாக எந்த வருடம் என்று கூட எனக்கு தெரியாது என்றால் தெரியாது. நான் பத்திரம் எதுவும் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

2. நான் சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் வரவில்லை. யார் என்னை சாட்சியம் அழைத்தார்கள் என்றால் பெரியவர் இராதாகிருஷ்ணநாயுடு. அவர் ஆரோக்கியமாக உள்ளரா என்றால் ஆரோக்கியமாக தான் உள்ளார். நாராயணன் சாந்தகுமாரி ஆகியோர் வீட்டிற்கு நான் சென்றுள்ளேனா என்றால் சென்றதில்லை. வழக்கு சொத்து நீண்டகாலமாக வேலிகாத்தான் செடியுடன் மேடும்பள்ளமாக உள்ளது என்றால் ஆம். இராதாகிருஷ்ணநாயுடு வாங்கிய பிறகு அதனை சமன் செய்தார். இராதாகிருஷ்ணநாயுடு வாங்கியது பிறர் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான்.

3. வழக்கு சொத்த குறித்த பிற விவரங்கள் தெரியாது என்றால் தெரியாது. இராதாகிருஷ்ணநாயுடு அசோக்கிற்கு சொத்தினை விற்பனை செய்தது தெரியுமா என்றால் தெரியாது. இராதாகிருஷ்ணநாயுடு வாங்கியது மட்டும் தான் தெரியும். வழக்கு சொத்து வாதிகளுக்கு சொந்தமானது என்றும் அவர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 40 வருடங்களாக இராதாகிருஷ்ணநாயுடு தான் பயிர் செய்து வருகிறார். வழக்கு சொத்திற்கான பட்டாவாதிகளின் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. இராதாகிருஷ்ணநாயுடு பெயரில் தான் உள்ளது. அந்த பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். நான் தவறாக கூறினேன் என்றும் அவர் பெயரில் பட்டா இல்லை என்றால் சரியல்ல.

4. இராதாகிருஷ்ணநாயுடுவின் மகன்களுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. அவர்கள் சென்னையில் தான் உள்ளார்கள் என்றால் சரிதான். வசதியாக தான் உள்ளார்கள் என்றால் சரிதான். இராதாகிருஷ்ணநாயுடு என் மீது பாசமாக இருப்பாரா என்றால் இருப்பார். நான் சிறு வயதிலேயே அவருடன் இருக்கிறேன். எனக்கு ஏதேனும் பணக்கஷ்டம் இருந்தால் அவர் உதவி செய்வார் என்றால் சரிதான். பயிர் செய்யும் போது நெல் தருவார். அவர் பெயரில் உள்ள மரியாதைக்கா அவர் அழைத்ததன் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

**விசாரணை முடியும் நேரம். 11.46.p.m.**